துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

*124. வின.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்லில் ஒரு புதிய Sub-Employment Office ஏற்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணை வேலை வாய்ப்பு அலுவலகம் (Sub-Employment Office), திண்டுக்கல் 24—11—1969 அன்றிலிருந்து இயங்கத் தொடங்கிவிட்டது.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் இருப்பதுபோல் திருச்சி மாவட்டத்தில் அதுமாதிரி "சப்-எம்பிளாய்ண்மெண்ட்" ஆபீஸ் ஏற்படுத்தினல் பல மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். புதுக்கோட்டையில் அதுமாதிரி ஏற்படுத்த அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேலை தரும் நிறுவனங்களை தொடங்குவதில் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அடுத்த மாத இறுதியில் கூட மத்திய தொழில் அமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும் அதுபற்றிய ஒரு கண் காட்சியை திருச்சியிலே நடத்துவதற்கு முயற்சி எடுத்து இருக்கிருர்கள். ஆனல், இந்த வேலை வாய்ப்பு துணை அலுவலகங்களைப் பொறுத்த வரையில் 10 தொடங்கலாம் என்று இருக்கிறேம். அதிலே இரண்டு தொடங்குவதற்கு இப்போது அனுமதி தந்திருக்கிறது. ஒன்று திண்டுக்கல்லிலும் மற்றென்று ஈரோட்டிலும் தொடங்குவதாக இருக்கிறது.

Grant for Central Textile Research Institute at Coimbatore.

*125 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any grant has been made to the Central Textile Research Institute, Coimbatore by the State Government during 1969–70; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

அணைக்கட்டுகள்

*126 வின—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அருகே செங்கப்படை கிராமத்துக்குப் பக்கத்தில் உள்ள காட்டாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?